Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Plot in the Short Stories of Uma Maheshwari

**Dr.V. Malik**, Assistant Professor of Tamil, Sadakathulla Appa College, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-7586-4100**
**DOI: 10.5281/zenodo.6622375**

## Abstract

*The plot of the short story is mainly about four stages in the basis of the story. They are the origin, development, zenith and summation. In Tamil literature, many successful stories exhibit the similar stages in the plot construction of the stories; that marks its ultimate success. The focus of this article is to explore Uma Mahesvi's position that how she has handled the techniques to weave her stories.*

**Keywords:** Short Story, Uma Maheshwari, Plot, Art.

## References

[1] Ku.ve. Balalsubramaniyan. *Ilakkiya Sinthanai*. M. Sethuraman, Publisher, Kumbakonam, 1993.
[2] R.Prema. *Feminist Approaches*. Tamil Book Temple, Pandi Bazaar, Thiyagarajanagar, Chennai-17.
[3] Road Ilanthiraiyan. *Sirukathai Selvam*. Tamil Book Temple, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் படைப்பு உலகம்

**முனைவர் வ. மாலிக்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி , திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7586-4100
DOI: 10.5281/zenodo.6622375

**ஆய்வுச்சுருக்கம்**

*சிறுகதையின் அமைப்பு என்ற நிலையில் பார்க்கும் போது ஒரு நிகழ்ச்சி ஒரு மாந்தரின் வெளிப்பாடு ஒரு கருப்புலப்பாடு என்ற அடிப்படையின் சிக்கலின் தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவு என்ற நான்கு நிலையில் அமைந்துள்ளது. உமா மகேஸ்வரியின் கதையில் இந்த நிலைப்பாடுகளும் காலத்தை மையபடுத்தி அமைந்துள்ளதா அதற்கான வெளியில் கதையை படைத்துள்ளாரா என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் விரிவாகும்.*

**திறவுச்சொற்கள்:** சிறுகதை, உமா மகேஸ்வரி, படைப்பு, காட்டு, கலை, நிலைப்பாடு.

**முன்னுரை**

சிறுகதை சின்னஞ்சிறு குங்குமச் சிமிழில் செய்யும் வேலைப்பாடு என்பர். சிறுகதை படைப்பது மிகவும் சிக்கலான பணி. சிறுகதைக்குச் செய்யும் உழைப்பை தொடர்க்கதைக்கு ஆற்ற வேண்டியது இல்லை. சிறுகதையின் அமைப்பு என்ற நிலையில் பார்க்கையில் இக்காலச் சிறுகதையில் பெரும்பாலும் எளிய நிலையான அமைப்பைக் கொண்டவையாக உள்ளன. ஒரு நிகழ்ச்சி, ஒரு மாந்தரின் பண்பு வெளிபாடு, ஒரு கரு புலப்பாடு என்ற அடிப்படையில் சிக்கிலின் தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவு என்ற நான்கு நிலையில் அமைந்துள்ளன. உமாமகேஸ்வரியின் கதையிலும் இந்த நான்கு நிலைபாடுகள் உள்ளது. இவர் படைப்பில் காலமானது இரண்டாக உள்ளது. 1. நிகழ்காலம் 2. இறந்த காலம் இந்த இரண்டு காலத்தையையும் மையப்படுத்தி அதற்கான வெளிகளில் கதையை படைத்துள்ளார். இவரது கதைகளில் காலப் பிண்ணனியையும் அவற்றின் மையங்களும விவாதிக்கப்படுகிறது. நிகழ் காலத்தின் காலப் பிண்ணனியும் படைப்பு வெளியும் அன்றாட வாழ்வில் நடக்கும் ஆணின் முறைதவறிய வாழ்விளை மூடாத ஜன்னலில் ஆசிரியர் நிகழ்காலத்தின் பிண்ணனியில் எடுத்துக் கூறுகிறார். இதில் இவரது படைப்பு உலகம் வீடு ஆகும். வாழிடம் கிராமம் கிராமத்தில் முதலாளி என்பவன் வீட்டில் வேலை செய்து வரும் பெண்களை தங்கள் உடல் இச்சைக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை ஆசிரியர் நிகழ்காலப் பிண்ணனியில் படைப்பாக படைத்துள்ளார்.

"வீடு நெருப்புப் பிடித்தாற் போலத் தானிருந்து உண்மையாகவே சிவனம்மாவின் முதுகில் அறைந்து தள்ளினால் சரமாரியாக அடிகள் விழவிழ அசையாமல் நின்றிருந்தாள் சிவனம்மாள். அடிகள் விழ விழ அசையாமல் நின்றிருந்தாள் சிவனம்மா அடிகளின் வேகத்தில் சுற்றியிருந்த ஒற்றைத் துணியும் நழுவ அவள் அவசரமாக அதை இறுகப் பிடித்தாள். அம்மா அதை அக்ரோஷமாகப் பற்றிப்பறித்து, **"குடுடி அதை, அவுத்துப் போட்டுட்டு ஆடு சும்மா. என்று கத்திவிட்டு தன் தலையில் அடித்துக் கொண்டு விம்மினாள். ஆனால் ஒரு பொட்டு கண்ணீரும் வரவேயில்லை அம்மாவின் வறண்ட கண்ணில் இருந்து"**

**(மூ.ஜ. பக்-15, 16).** அன்றாட வாழ்க்கையில் பெண்ணின் நிலை எப்படிப்பட்டதாக உள்ளது என்பதையே இதில் ஆசிரியர் சூட்டிக் காட்டியுள்ளார். இது ஒரு நாள் நிகழ்வு ஆகும். ஆசிரியரின் "ரோஸ்" என்ற சிறுகதையில் நகரத்தை மையப்படுத்தி எழுதியுள்ளார்.கிராம வாழ்வானாலும் நகர வாழ்வானாலும் "ஆண்" தான் வாரிசாக வேண்டும் என்பதை மையப்படுத்தி நிகழ்காலத்தில் பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு உள்ளது என்பதை ஆசிரியர் கூறியுள்ளார். இக்கதை ஆறு மாதத்தில் நடக்கும் நிகழ்வாகும். "பாப்பாவுக்கு ஆறு வயசதகுமே? இன்னு ஒண்ணு வேண்டாம்னு இருக்கீங்களா. இல்லை என் மாமியாருக்கு குல வாரிசு வேணுமாம் ஆம்பளப் பிள்ளை ஆம்பளப் பிள்ளைன்னு ஒரே நச்சரிப்பு. மெடிகல் டெஸ்ட் எடுத்துக் கிட்டுருக்கேன்".

குடும்ப பிண்ணனியில் பெண்களை வாரிசாக ஏற்றுக் கொள்ள பெண்ணே முன் வருவது இல்லை என்பதை காலத்தின் அடிப்படையில் ஆசிரியர் கூறியுள்ளார்.ஒவ்வொரு கால கட்டத்திலும் பெண்ணின் நிலைபாடுகள் உருவத்திலும் உள்ளத்திலும் மாறுபட்டுக் கொண்டே இருக்கிறது என்பதை ஆசிரியர் மழையில். கூறியுள்ளார். கணவன் வீட்டில் இருக்கும் அவள் 18 வருடங்கசளுக்கு முந்திய நினைவுகளை திருமணத்திற்கு பின் நிகழ் காலத்தில் அதை நினைத்துக் கொண்டு வாழ்கிறாள். தாய்மை அடைந்தவுடன் அன்னியமாய் தெரியும் அவருக்கு எல்லாம் சொந்தமாகிவிட்டது, **"ஞாபகம் வந்தது விரல்களைப் பிரித்து எண்ணினாள் வழக்கமாக சரியாக இருபத்தெட்டே நாட்களில் அது வந்து விடும். எப்போதும் கடந்து நாட்கள் கூடி, இருக்கின்றன. போன மாதத் தேதி திருமணத்திற்கு மறுவாரம் அதற்குள்ளா? இது தான் அதுவா மறுபடி மறுபடி கணக்கிட்டால்" (மழை-ப.35)** ஆனால் அவர்கள் எதிர்காலம் கேள்வி குள்ளாகிவிடுகிறது. இதனை மனதில் வைத்தே பாட்டி பேத்தியை காப்பாற்றுகிறாள். இதில் ஆசிரியர் படைப்பு வெளியாக தோட்டத்தையும் வீட்டையும் காட்டியுள்ளார். இக்கதையின் நிகழ்வு ஒரு நாள் ஆகும். "முடிவற்ற இரவுகளில் தோட்டத்தின் இருளிலும் பச்சை மணத்திலும் ஈரக்காற்றிலும் விழித்துக் காத்திருப்பாள். இருட்டில் நடைபாதை பளீரென்று ஒளிரும். முன் வேலில் புதராக அடர்ந்த முருதாணி பொடிப் பொடியான மஞ்சள் பூக்கள் கொண்ட கொடிகள் பின்னிக் கிடக்கும். ஒருவரும் கண்டுபிடிக்க முடியாத திறப்பொன்றை அந்த வேலியில் உருவாக்கினான். சாயங்காலம் மலரும் பிச்சியும், முல்லையும் இரவின் வாசனையாகக் கமழும் பஞ்சுக் குமிழ்களாக நந்தியாவட்டை மொட்டுக்கள். இலைகளடர்ந்த வாகை மரத்திலிருந்து கூவும் பறவை. மல்லிகைப் புதர் மறைவில் அவன் தொடுகையை உணர்வாள்" (வேலி ப-82). மற்றொரு கதையான "என்றைக்கு" என்ற கதையில் ஹேமா என்பவள் வீட்டிற்குள்ள சுதரம்மற்ற உணர்வாய் பொறியில் சிக்கிய அணிலாய் தன்னை உணர்கிறாள். இதில் ஆசிரியர் வீட்டை படைப்பு வெளியாக கொண்டுள்ளார். **"வீட்டைத் தினமும் போர்த்தும் மதியங்கள் சுருங்கிய உலகம் போல் கூடை அதன் மீது கவிழ்ந்து நெருக்க, செயலற்றுக் கிடக்கும் அணில் ஹேமாவிற்கு அது அணிலே இல்லையென்று தோன்றும் தான் பார்த்த அணில்களை நினைப்பாள். வேப்பமரத்தடியில் மின்னல் துண்டு போல் ஓடித்திரியும். அணில், மருதாணிப் புதரோரம் இணையோடு காதல் புரியும் அணில். எந்நேரமும் துறுதுறு வென்று பூமியைத் துளைக்கத் தவித்து முனையும் அணில் எது போலவுமில்லை இது அணிலென்றால் சுதந்திரம் சுறுசுறுப்பு உற்சாகம் குதூகலம்" (என்றைக்கு - பக்கம் -92)**

**வாழ்வின்எதார்த்தத்தைபிரதிபலித்தல்**

திருமணம் ஆன புதுப்பெண்ணின் வாழ்வினைக் காலப் பிண்ணனியுடன் வீட்டை படைப்பு வெளியாக வைத்து ஆசிரியர் கூறியுள்ளார்.பெண்ணானவள் காலத்தின் போக்கினை அனுபவித்தே ஆக

வேண்டும். கணவனுக்காக தன்னையே இழக்கக்கூடதவறுவதுயில்லை என்பதை ஆசிரியர் பொருள்வயின் உறவில் கூறியுள்ளார். நகரமான ஊட்டியில் அவள் வாழ்வு நரகமாகிவிட்டது. ஒரு நாளின் இருமை அவளை பிணமாகிவிட்டது என்பதை ஆசிரியர் கூறியுள்ளார். "இருட்டத் துவங்கிவிட்டது. ஊருக்குள் கார் நுழைகளையில் அவள் தன்னை ஒளிக்கும் பொருட்டு தலையைப் பின்னிழுத்து உட்கார்ந்து கொண்டாள் பரபரவென்று வீட்டை நோக்கி நடக்கும் போது, புடவை தடுக்கியது கால்கள் தகர்ந்தனர்" (பொருள்வயின் உறவு ப. 57) இதில் ஆசிரியர் படைப்பு வெளியையும் வாழிடத்தை வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

ஒரு ஆணை நம்பி ஓடிபோக நினைக்கு பெண் ஒருத்திக்கு பாட்டி "வேலியாய்" இருந்து அவளை எப்படி காப்பாற்றுகிறாள் என்பதை ஆசிரியர் தனது "வேலி" சிறுகதையில் கூறியுள்ளார். பொதுவாக கிராமத்தில் பணக்கார வீட்டுப் பெண்கள் வீட்டு வேலை செய்யும் ஆணுடன் ஓடிப்போய் விடுகின்றனர். ஆனால் அவர்கள் எதிர்காலம் கேள்வி குள்ளாகிவிடுகிறது. இதனை மனதில் வைத்தே பாட்டி பேத்தியை காப்பாற்றுகிறான். இதில் ஆசிரியர் படைப்பு. வெளியாக தோட்டத்தையும் வீட்டையும் காட்டியுள்ளார். இக்கதையின் நிகழ்வு ஒரு நாள் ஆகும். "முடிவற்ற இரவுகளில் தோட்டத்தின் இருளிலும் பச்சை மணத்திலும் ஈரக் காற்றிலும் விழித்துக் காத்திருப்பாள். இருட்டில் நடைபாதை பளீரென்று ஓளிரும். முன் வேலில் புதராக அடர்ந்த முருதாணி பொடிப் பொடியான மஞ்சள் பூக்கள் கொண்ட கொடிகள் பின்னிக் கிடக்கும். ஒருவரும் கண்டுபிடிக்க முடியாத திறப்பொன்றை அந்த வேலியில் உருவாக்கினான். சாயங்காலம் மலரும் பிச்சியும், முல்லையும் இரவின் வாசனையாகக் கமழும் பஞ்சுக் குமிழ்களாக நந்தியா வட்டைமொட்டுக்கள். இலைகளடர்ந்த வாகை மரத்திலிருந்து கூவும் பறவை. மல்லிகைப் புதர் மறைவில் அவள் தொடுகையை உணர்வாள்" (வேலி ப-82). மற்றொரு கதையான “என்றைக்கு" என்ற கதையில் ஹேமா என்பவள் வீட்டிற்குள்ள சுதரம்மற்ற உணர்வாய் பொறியில் சிக்கிய அணிலாய் தன்னை உணர்கிறாள். இதில் ஆசிரியர் வீட்டை படைப்பு வெளியாக கொண்டுள்ளார்.

"வீட்டைத் தினமும் போர்த்தும் மதியங்கள் சுருங்கிய உலகம் போல் கூடை அதன் மீது கவிழ்ந்து நெருக்க, செயலற்றுக் கிடக்கும் அணில் ஹேமாவிற்கு அது அணிலே இல்லையென்று தோன்றும் தான் பார்த்த அணில்களை நினைப்பாள். வேப்பமரத்தடியில் மின்னல் துண்டு போல் ஓடித்திரியும். அணில், மருதாணிப் புதரோரம் இணையோடு காதல் புரியும் அணில், எந்நேரமும் துறுதுறு வென்று பூமியைத் துளைக்கத் தவித்து முனையும் அணில் எது போலவுமில்லை இது அணிலென்றால் சுதந்திரம் சுறுசுறுப்பு உற்சாகம் குதூகலம்” (என்றைக்கு - பக்கம்-92) நிகழ்கால வாழ்வில் பெண் சிறை கைதியாகவே தன்னை உணங்கிறான் என்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். "பயம்" என்ற கதையில் ஆசிரியர் படைப்பு வெளியாக இரமில் பெட்டியை கொண்டுள்ளார். காலம் நிகழ்காலத்துடன் ஒரு நாளில் முடிகின்ற படைப்பாகும். இரயில் பயணம் செய்யுவும் அவளுக்கு பயமாய் தெரிகிறது. யாகு இல்லாது தாள் தனித்துப் பயனாம் செய்வது போல் உளர்வு ஏற்படுகிறது. ஒரு தாளில் பயனம் செய்யவே பயப்படும் இவள் எப்படி வாழ்க்கை பயணத்தை எதிர்கொள்ளுவாள் என்பதை ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

"நான் மட்டும் தான் ஒரு மாபெரும் வெற்றிடத்தில் அவை மோதுகிறேன் உருவமற்ற பொருளற்ற ஏதோ ஒன்று என்னை துரத்தித் துன்புறுத்துகின்றது. ஆனால் அது அதிபயங்கரமானது. மானிட சக்தியை நசுக்கித் தீர்ப்பது எத்திசையில் நகர்கிறது என்பதே தெரியாத இந்த வாழ்க்கையும், ரயிலையும் போல இருளுக்குள் கொண்டிருக்கிறது...."(ப. 114). விரைந்துபெண்ணின் பயத்திற்கு அளவே இல்லை என்பதை ஆசிரியர் இக்கதையில் இரயில் பெட்டியை படைப்புகளாக கொண்டு படைத்துள்ளார்.

"தொலைகடல்" என்னும் சிறுகதையில் நிகழ்காலத்தில் பெண்கணவன் இல்லாச் சூழலில் மற்றொரு ஆணின் வலையில் எப்படி தன்னை மாய்கிறாள் என்பதை கடலை, படைப்பு வெளியாகப் வீட்டை அதனுடன்மையப்படுத்தியும் படைத்துள்ளார். இக்கதையின் நிகழ்வு ஒரு நாள் ஆகும்.

**பெண்ணின்துன்பகிண்ணம்**

"தனது அறைக்குள் ராதா நுழைந்த போது காற்றிலாடிக் கொண்டிருந்தன ஜன்னல்கள் சற்றுத் தொலைவில் புரண்டு கொண்டிருந்தது. கடல், ரகசியமாகக் காமமுற்று பெண்ணைப் போல மங்கலான நிலவொளியில் அதன் கருநீலஅலைகள் நிலைகொள்ளாமல் நெளிந்தன. பொங்கி எழும்பின. தயங்கித் தணிந்தன. ராதா கட்டில் விளம்பிலிருந்து தன் கல்யாணப் புகைப்படத்தைத் திருப்பி வைத்தாள். மறுபடி அதை எடுத்து ரகுவை ஒரு தரம் பார்த்துவிட்டு கவிழ்த்திப் போட்டான்", (தொலைகடல் ப.123-127) பெண்தன்னைலேசாக ஆணிடம் இழந்து விடுகிறான் என்பதை ஆசிரியர், இக்கதை வழி கட்டிக் காட்டியுள்ளார்."மரப்பாச்சி" என்னும் சிறுகதையில் ஆசிரியர் படைப்பு வெளியாக தோட்டத்தை மையப்படுத்தியுள்ளார் காலம் நிகழ்காலமாகும். வாழிடமாக நகரத்தை கொண்டுள்ளார். தோட்டத்திற்குள் இருக்கும் கழிப்பறைச் செல்லும் சிறுமியை அவளது. மாமா அடைய நினைக்கும் கொடுமையை ஆசிரியர் இக்கதையில் கூறியுள்ளார். "இந்த மருதாணி புதர்கிட்டே உட்கார ஆசையாக இருக்கு கொட்டும் முத்தங்கள் கன்னத்தில் உதட்டில் கழுத்தில் அவளுள் தளிர் விடுகிற அல்லது விதையே ஊன்றாத எதையோ தேடுகிற விரல்களின் தடவல் மாறாக அதை நசுக்கிச் சிதைக்கிறது" (ப.12 - மரப்பாச்சி) தோட்டத்தை படைப்பு வெளியாக ஒரு நாள் நிகழ்வாக இக்கதையை (படைத்துள்ளார் ஆசிரியர். "ஆண்" என்னும் சிறுகதையில் ஆசிரியர் படைப்பு வெளியாக வீட்டை மையப்படுத்தி கூறியுள்ளார். வீட்டில் நடக்கும் சிறுபிரச்சினைக்கும் மனைவியை அடித்து துன்புறுத்தும் கணவன் - அந்த பிரச்சனைக்கு காரணாம் அவன்தான் என்று தெரியுத்தும் அடித்த மனைவியை அவன் கண்டு கொள்ள வில்லை. இக்கதையில் வரும் அனைத்து சம்பவங்களும் நிகழ்காலப் பிண்ணனியுடன் தொடர்புடையதாக உள்ளது. இது பெண்ணின் அன்றாட வாழ்வில் நடக்கும் சிக்கலாகும் என்பதை ஆசிரியர் வீட்டை மையப்படுத்தி எழுதியுள்ளார். மற்றொரு கதையில் ஆசிரியர் வீட்டை மையப்படுத்திய படைப்புலகமாக கொண்டாலும் குறிப்பாகக் கழிவறையை மையப்படுத்தி எழுதியுள்ளார். கிராமத்தில் நடக்கும் நிகழ்வாகும். நாம் பயன்படுத்தும் கழிப்பறையை நாமே கழுக முகம் சுளிக்கும் போது அந்தப் பணியை செய்யும் மனிதர்களை நாம் எப்படி மதிக்க வேண்டும் என்பதையே ஆசிரியர் படைப்பாக கூறியுள்ளார். **"வீசி வீசி ஊற்றும் போது மேல் தெறிக்கும் துளிகளை அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை லாவகத்துடன் துரிதகதியில் இயங்குகிற கை, கால்கள் வெற்று முதுகில் கொப்புளிக்கிற வியர்வைத் துளிகள் தவிர வேறெதுவும் தெரியாத தூரத்திலிருந்து தான் அவர்களை பார்க்க முடிகிறது" (நெடி-ப-54)** இது ஒரு நாளின் இரவில் நடக்கும் நிகழ்வு ஆகும் . இதனை ஆசிரியர் நிகழ்காலம் பிண்ணினியில் எழுதியுள்ளார்.

"கதவு திறக்கும் கணம்" என்ற சிறுகதையில் ஆசிரியர்கதவை படைப்பு வெளியாக படைத்து காட்டியுள்ளார். வீட்டிற்கு கதவு எப்படி அவசியமோ, அதேப் போல் பெண்ணின் வாழ்வில் கணவன் இல்லாவிட்டால் அவள் அடையும் துன்பமும் அவமானமும் என்ன என்பதை ஆசிரியர் கூறியுள்ளார். **"கதவோ இப்போதைக்குத் திறப்பதாய்த் தெரியவில்லை வழக்கமாய்இந்நேரம் திறந்து விடுவதுதான். மஞ்சு எட்டோ ஒன்பதோ படிப்பவளாயிருக்கும். அதை கூடச் சரியாய் தெரிந்து கொள்ள விடாத அண்டை மனிதரை அசைகப் பொழுதற்ற இந்த வாழ்வின் அவசரக் கதி ..." (ப - 59)** கதவு திறக்கும்

கணம். இக்கதையில் ஆசிரியர் வீட்டை படைப்புலகமாக கொண்டாலும் குறிப்பாக கதவை மையப்படுத்தி கூறியுள்ளார். இது அன்றாட வாழ்வில் நிகழ்காலத்துடன் தொடர்புடைய ஒரு நாள் நிகழ்வாகும். இன்னொரு கதையான "யூதர்கள்" என்ற சிறுகதையில் ஆசிரியர் படைப்புலகமாக புதர்கள் நிறைந்திருக்கும் பகுதியையும் தெருவையும் பற்றி கூறியுள்ளார். மன ரீதியாக பாதிக்கப்பட்ட அந்த பெண்ணின் உறைவிடம் புதரும் தெருவும் ஆகும் என்பதை ஆசிரியர் இக்கதையில் கட்டிக் காட்டியுள்ளார். **"புதர்களுக்குள்ளிருந்து ஒருத்தி முளைத்தாள் பொட்டுத் துணியில்லாமல்தெரு பாரபட்சமின்றி அவனை தழுவிக் கொள்கிறது? அதன் ஓரங்களில் அவள் குப்பையாக கிடக்கிறான். முனையில் சில நேரம் சிற்பமாய்ச் சமைக்கிறாள்" (மு77–புதர்கள்)** இக்கதையில் வரும் நிகழ்வுகளை நாம் அன்றாட வாழ்வில் கண்கூடாக பார்ப்பது உண்மை இதனையே ஆசிரியர் தனது படைப்பில் கூறியுள்ளார். "மலையேற்றம்" என்னும் சிறுகதையில் பெண்ணின் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் மலையேறி கடப்பது போன்றது என்பதை உணர வைக்கும் வகையில் கூறியுள்ளார்படைப்பு வெளியாக "மலையை" குறிப்பாக கூறியுள்ளார் பெண்ணின் வாழ்க்கை முழுவதும் வெறுமை தான் என்பதை இதன் மூலம் உணர்த்துகிறான். **"மலையை நெருங்கியபோது அதன் பிரமாண்டமும் எங்கள் உருவச் சிறுமையும் மூச்சு முட்ட வைத்தன எல்லா வழிகளையும் அடைத்து அந்த அத்து மீறலையும் அனுமதிக்காத அதன் ஆகிருதியில் திகிலானோம். மலை தூரப்பார் வைக்குத் தெரிவது போல் சீரான செதுக்கல்களோடில்லை. கரடு முரடான மேற்புறம் பக்கவாட்டில் மெல்லிய மடங்கள் அவற்றின் பாதங்கள் பதிவதற்கேற்ற ஆழமும் அகலமும் இருக்கிறதாவென்று தெரியவில்லை" (மலையேற்றம், ப-86)**

பெண்ணின் வாழ்க்கையை ஆசிரியர் மலையேற்றத்துடன் ஒப்பிட்டு பெண் வாழ்வு சிக்கலானது என்பதை ஒரு நாள் நிகழ்வாக இக்கதையைபடைத்துள்ளார்.

**முடிவுரை**

ஆசிரியர் இறந்த காலம், நிகழ்காலம் என்ற இந்த இரண்டு காலத்தையும் அடிப்படையாக கொண்டு வீடு, வீடு சார்ந்து குடும்பம் இவற்றை படைப்பு வெளியாக கொண்டுள்ளார். பொதுவான இடங்கள் இவரது கதைகளில் அதிக அளவு இல்லை குறிப்பான இடமாக ஒரு சில கதைகளில் மாசீகார வீதி, இரயில்வே ஸ்டேஷன், மகாபலிபுரம் என்று குறிப்பிட்டுள்ளார். நிகழ்வாக ஒரு நாள் அதையும் தாண்டி ஒரு வார நிகழ்வாக கூறியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

[1] பாலசுப்பிரமணியன், கு,வெ. *இலக்கிய சிந்தனை*, எம்.சேதுராமன், வெளியீட்டாளர், கும்பகோணம், 1993.

[2] பிரேமா, ரா. *பெண்ணிய அணுகுமுறைகள்*. தமிழ் புத்தக ஆலயம், 15. மாசிலா மணித் தெரு, பாண்டி பஜார், தியாகராஜநகர், சென்னை-17, 1999.

[3] சாலை இளந்திரையன். *சிறுகதைச் செல்வம்*, தமிழ் புத்தக ஆலயம், சென்னை, 1996.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.